# March 7, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஈரான் உடனான போர் காரணமாக மேற்காசியாவிலிருந்து கச்சா எண்ணெய் விநியோகம் தடைபட்டுள்ளதால், ரஷியாவிடமிருந்து இந்தியா மீண்டும் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்துகொள்ள 30 நாள்கள் தற்காலிக அனுமதியை அமெரிக்கா அளித்துள்ளது.

(i) இந்த தற்காலிக விலக்கு நடவடிக்கை, முக்கியான ஹோர்முஸ் நீரிணை கடல் வழித் தடத்தை மூடி உலக அளவில் எரிசக்தி தட்டுப்பாட்டை ஏற்படுத்த ஈரான் மேற்கொள்ளும் முயற்சியால் ஏற்படும் அழுத்தத்தைக் குறைக்கும்.

(ii) இந்த அனுமதியைத் தொடர்ந்து, இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷியா விடமிருந்து மீண்டும் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்வதற்கான நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தியுள்ளன. சுமார் 1.5 கோடி பீப்பாய்களுக்கு மேல் கச்சா எண்ணெய் கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளன.

2. நேபாள நாடாளுமன்றத் தேர்தலில், இளைஞர்களின் ஆதரவு பெற்ற 'ராப்' பாடகரும், முன்னாள் மேயருமான பாலேந்திர ஷா பாலனின் (35) ராஷ்ட்ரிய சுதந்திர கட்சி பெரும்பாலான இடங்களில் முன்னிலை பெற்றது. அதேநேரம், அந்நாட்டின் பாரம்பரியமான பெரிய கட்சிகள் பெரும் பின்னடைவைச் சந்தித்தன.

(i) நாடாளுமன்றத் தேர்தலில் மகத்தான வெற்றியின் மூலம் இளம் தலைவர் பாலேந்திர ஷா பாலன் பிரதமராகவுள்ளார்.

(ii) அண்டை நாடான நேபாளத்தில் ஊழல், வாரிசு அரசியல் மற்றும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எதிராக இளைஞர்கள் கடந்த ஆண்டு செப்டம்பரில் மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதன் விளைவாக அப்போதைய பிரதமர் கே.பி.சர்மா ஒலி தலைமையிலான கூட்டணி அரசு கவிழ்ந்தது; அதிபர் ராம்சந்திர பௌடேல் நாடாளுமன்றத்தைக் கலைத்து, இடைக்கால பிரதமராகசுசீலா கார்க்கியை நியமித்தார்.

(iii) ஆறு மாதங்களுக்குப் பிறகு புதிய அரசைத் தேர்ந்தெடுப்பதற்காக நாடாளுமன்ற கீழவையான பிரதிநிதிகள் சபையின் 275 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்றது.

3.மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக கத்தாரில் இருந்து வரும் திரவ இயற்கை எரிவாயு (எல்என்ஜி) விநியோகம் தடைபட்டதால், இந்தியாவில் யூரியா உற்பத்தி குறையத் தொடங்கியுள்ளது.

(i) யூரியா தயாரிப்புக்கு மிக முக்கியமான மூலப்பொருளான திரவ இயற்கை எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், இஃப்கோ உள்பட முன்னணி உர நிறுவனங்கள் தங்களின் சில ஆலைகளில் உற்பத்தியை ஏற்கெனவே குறைத்துள்ளன.

(ii) எல்என்ஜி மட்டுமல்லாமல் உரத் தயாரிப்புக்குத் தேவையான அமோனியா, சல்பர் போன்ற இதர மூலப் பொருள்களின் விலையும் சர்வதேச சந்தையில்

அதிகரிக்கத் தொடங்கியுள்ளது. இது ஒட்டுமொத்த உற்பத்திச் செலவையும் பன்மடங்கு உயர்த்தும் என அஞ்சப்படுகிறது.

(iii) தற்போது உரக் கழகங்களிடம் போதிய கையிருப்பு இருந்தாலும், போர் நீடித்தால் ஜூன் மாதம் தொடங்கும் பருவ மழை காலத்தின்போது விவசாயிகளுக்குத் தேவையான உர விநியோ கத்தில் தட்டுப்பாடு ஏற்படலாம்.

(iv) மேலும் உள்நாட்டு உற்பத்தி குறைந்தால், அதிக விலைக்கு வெளிநாடுகளில் இருந்து உரத்தை வாங்க வேண்டிய சூழல் இந்தியாவுக்கு ஏற்படும். இது அரசின் நிதி மேலாண்மைக்கு பெரும் சவாலாக அமையும்.

(v) இருப்பினும், இந்த நெருக்கடி சூழலை மத்திய அரசு தீவிரமாக கண்காணித்து வருகிறது. விவசாயிகளுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில், மற்ற நாடுகளிலிருந்து எரிவாயுவைப் பெறுவது போன்ற மாற்று ஏற்பாடுகள் குறித்து ஆலோசிக்கப்பட்டு வருவதாகவும் உரத்துறை அமைச்சக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

4. ஈரான் மீதான அமெரிக்காவின் தாக்குதலுக்கு வழிவகுக்கும் அதிபர் டிரம்ப்பின் போர் தொடர்பான அதிகாரங்களைக் குறைக்கும் தீர்மானம், அமெரிக்க நாடாளுமன்றத்தில் தோல்வியடைந்தது.

(i) அமெரிக்க அரசமைப்புச் சட்டப்படி, அந்நாட்டு நாடாளுமன்றத்தால் மட்டுமே போர் பிரகடனத்தை வெளியிட முடியும். ஆனால், நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல், ஈரான் மீது தாக்குதல் நடத்த அதிபர் டிரம்ப் உத்தரவிட்டதாக எதிர்க் கட்சியான ஜனநாயகக் கட்சி எம்.பி.க்கள் குற்றஞ்சாட்டி வருகின்றனர்.

(ii) இவ்விவகாரத்தைச் சுட்டிக்காட்டி, அமெரிக்க நாடாளுமன்றத்தின் மேலவையான செனட் சபையில் எதிர்க்கட்சியினரால் அண்மையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. ஆனால், செனட் சபையில் டிரம்ப்பின் குடியரசு கட்சி எம்.பி.க்களே அதிக எண்ணிக்கையில் உள்ளனர். அதனால், எதிர்க்கட்சியினரின் தீர்மானம் போதிய ஆதரவின்றி தோல்வியடைந்தது.

(iii) இதையடுத்து, கீழவையான பிரதிநிதிகள் சபையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டது. அங்கும் குடியரசு கட்சி எம்.பி.க்களே அதிகம் உள்ளனர். அதனால், தீர்மானத்துக்கு ஆதரவாக 212 எம்.பி.க்களும், எதிராக 219 எம்.பி.க்களும் வாக்களித்தனர். இதன்மூலம், இரு அவைகளிலும் தீர்மானம் நிறைவேற்றப்படாமல் தோல்வியடைந்தது.

5. முதலாமாண்டு கேலோ இந்தியா பழங்குடி விளையாட்டுப் போட்டிகள், ராய்பூர், ஜக்தல்பூர், சர்குஜா ஆகிய நகரங்களில் மார்ச் 25 முதல் ஏப்ரல் 6 வரை நடைபெறவுள்ளது.

6. நடப்பு நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமர்வு மார்ச் 9-ஆம் தேதி தொடங்கி ஏப்.2 வரை நடைபெறவுள்ளது.

(i) மக்களவைத் தலைவரை பதவி நீக்கக் கோரும் எதிர்க்கட்சிகளின் தீர்மானம் மார்ச் 9-இல் தாக்கல் செய்யப்படவுள்ளது. எனவே, அவை அலுவல்களில் தவறாமல்

பங்கேற்க வேண்டும் என்று தங்களது எம்.பி.க்களுக்கு ஆளும் பாஜகவும், எதிர்க் கட்சியான காங்கிரஸும் கொறடா உத்தரவு பிறப்பித்துள்ளன.

(ii) நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் கடந்த ஜன.28-ஆம் தேதி குடியரசுத் தலைவர் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13-ஆம் தேதியுடன் நிறைவடைந்த முதல் கட்ட அமர்வில் எதிர்க்கட்சிகள் தொடர்ந்து அமளியில் ஈடுபட்டன.

(iii) அரசமைப்புச் சட்டத்தின் 94சி பிரிவின்கீழ், பெரும்பான்மை வாக்குகளுடன் தீர்மானம் நிறைவேற்றி மக்களவைத் தலைவரை பதவிநீக்கம் செய்ய முடியும்.

(iv) கடந்த காலங்களில் மக்களவைத் தலைவர்களாக இருந்த ஜி.வி.மாவலங்கர் (1954), ஹுக்கம் சிங் (1966), பல்ராம் ஜாக்கர் (1987) ஆகியோர் இதுபோல் நம்பிக்கையில்லா தீர்மானத்தை எதிர்கொண்டனர். ஆனால், எந்தத் தீர்மானமும் வெற்றி பெறவில்லை. தற்போது எம்.பி.க்கள் பலத்தின் அடிப்படையில், ஓம் பிர்லாவுக்கு எதிரான தீர்மானமும் தோல்வியையே சந்திக்கும் நிலை உள்ளது.

7. சென்னை உயர்நீதிமன்றத்தின் 55-ஆவது தலைமை நீதிபதியாக சுஷ்ருத் அரவிந்த் தர்மாதிகாரி பதவியேற்றுக் கொண்டார்.

(i) அவருக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

(ii) சென்னை உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதியாக இருந்த எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா பணி ஓய்வு பெற்றார்.

(iii) இதையடுத்து, கேரள மாநில உயர் நீதிமன்ற நீதிபதியான எஸ்.ஏ.தர் மாதிகாரியை, சென்னை உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதியாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார்.

8. தமிழ்நாடு தகவல் ஆணையத்துக்கு இரு புதிய மாநில தகவல் ஆணையர்கள் பதவியேற்றனர்.

(i) இவர்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி, பதவிப்பிரமாணம் செய்து வைத்தார்.

(ii) தகவல் அறியும் உரிமைச் சட்டம், 2005 (மத்திய சட்டம் 22/2005) பிரிவு 15 -இன் துணைப் பிரிவு (3) ஆல் வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஆளுநர் ஆர்.என்.ரவி, ஓய்வு பெற்ற ஐஏஎஸ் அதுல்ய மிஸ்ரா, ஓய்வு பெற்ற ஐபிஎஸ் அதிகாரி அபய்குமார் சிங் ஆகியோரை தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் மாநில தகவல் ஆணையர்களாக நியமித்துள்ளார்.

9. செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை தற்காலிகமாக நிறுத்த மத்திய அரசு முடிவு :-

- திட்டத்தை செயல்படுத்துவதில் குறிப்பிடத்தக்க பிழைகள் மற்றும் குறைபாடுகளை கண்டறிந்த பின்னர், நாடு தழுவிய செறிவூட்டப்பட்ட அரிசி விநியோகத்தை மத்திய அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.
- செறிவூட்டப்பட்ட அரிசி அரிசியைப் பொடி செய்து இரும்பு, ஃபோலிக் அமிலம் மற்றும் வைட்டமின் பி12 உடன் கலப்பதன் மூலம் உற்பத்தி செய்யப்படுகிறது.

இந்தக் கலவை இயந்திரங்களைப் பயன்படுத்தி மீண்டும் அரிசி தானியங்களாக வடிவமைக்கப்பட்டு, ஒரு கிலோ செறிவூட்டப்பட்ட தானியங்கள் 100 கிலோகிராம் சாதாரண அரிசிக்கு என்ற விகிதத்தில் வழக்கமான அரிசியுடன் கலக்கப்படுகிறது.

- 2019-21 தேசிய குடும்ப சுகாதார கணக்கெடுப்பில் அடையாளம் காணப்பட்ட பரவலான இரத்த சோகையை எதிர்த்துப் போராடுவதற்காக இந்தத் திட்டம் 2022 இல் தொடங்கப்பட்டது. இது ஆரம்பத்தில் மார்ச் 2024 இல் முடிவடையும் வகையில் மூன்று கட்டங்களாக திட்டமிடப்பட்டது, ஆனால் சமீபத்தில் 2028 வரை நீட்டிக்கப்பட்டது.
- கிடங்குகளில் செறிவூட்டப்பட்ட அரிசியை நீண்ட காலத்திற்கு சேமிப்பது நுண்ணூட்டச்சத்துக்களின் ஆற்றலைக் குறைப்பதால், பொதுமக்களுக்கு எதிர்பார்க்கப்படும் சுகாதார நன்மைகளை உறுதி செய்வது கடினம் என்று விசாரணைகள் வெளிப்படுத்தின.
- நிதி ஆயோக் மற்றும் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் (ICMR) ஆகியவற்றின் ரகசிய அறிக்கைகள், ‘தலசீமியா’ மற்றும் ‘சிக்கில் செல்’ போன்ற நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அதிகப்படியான இரும்புச்சத்து உட்கொள்ளல் தீங்கு விளைவிக்கும் என்று பரிந்துரைத்தன.
- நிதி ஆயோக் நடத்திய முன்னோடி திட்ட மதிப்பாய்வுகள், செறிவூட்டப்பட்ட அரிசி தானியங்களின் தரம், சுவை, அமைப்பு மற்றும் தோற்றத்தில் உள்ள குறைபாடுகளை அடையாளம் கண்டுள்ளன.
- இந்தத் திட்டத்திற்காக மத்திய அரசு தோராயமாக ₹17,000 கோடி செலவிட்டுள்ளது. நுண்ணூட்டச்சத்து முன்கலவையை உற்பத்தி செய்யும் வெளிநாட்டு நிறுவனங்கள், ஆண்டுதோறும் ₹1,800 கோடி மதிப்புள்ள சந்தையைப் பிடிக்க நெறிமுறையற்ற வழிகளைப் பயன்படுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.
- சில பகுதிகளில், குறிப்பாக மலைப்பாங்கான பகுதிகளில், அரிசியின் தோற்றம் அது "பிளாஸ்டிக் அரிசி" என்ற வதந்திகளுக்கு வழிவகுத்தது, இதனால் பல குடிமக்கள் அதை உட்கொள்ள மறுக்கின்றனர்.
- ஊட்டச்சத்து நிபுணர்கள் செறிவூட்டப்பட்ட அரிசி மட்டும் இரத்த சோகைக்கு முழுமையான தீர்வு அல்ல என்று எச்சரித்துள்ளனர். பலதரப்பட்ட உணவை ஊக்குவிப்பதும், பலதரப்பட்ட உணவு உட்கொள்ளல் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் ஒரு பயனுள்ள நீண்டகால உத்தி என்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்.
- இந்தத் திட்டம் செலவு குறைந்த தீர்வாகும் என்ற அரசின் நிலைப்பாடு இருந்தபோதிலும், உச்ச நீதிமன்றம் மற்றும் பல உயர் நீதிமன்றங்களில் சட்ட சவால்களை எதிர்கொண்டுள்ளது.
- தற்போதைய இடைநிறுத்தம் இருந்தபோதிலும், இந்தத் திட்டம் இலக்கு மக்கள்தொகையில் தோராயமாக 60% பேரை மீட்டமைத்துள்ளது, நாட்டின் மக்கள் தொகை 60 முதல் 100 மில்லியன் மக்கள் வரை இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது